100510
894.811

# நீ

கவிஞர்

## அபுபக்கர்

சம்மாந்துறை பிரதேச சபை
Sammanthurai Pradeshiyasabha
அமீர் அலி பொது நூலகம்
AMIR ALI PUBLIC LIBRARY

வானில் நீந்தும் விண்மீனாய்
வளர்ந்து செல்லும் தண்மதியாய்
தானே ஒளிரும் தினகரனாய்
தரணி பெற்ற பெருமகனாய்
வானோர் போற்றும் மானிடனாய்
வந்தாய், மனிதா! பின்னும் நீ
ஏனோ புழுவாய் நெளிகின்றாய்
எழுவாய், உண்மை அறிவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25/2

MIR ALI PUBLIC LIBRARY
PRADESHIYA SABHA
SAMMANTHURAI

MIR ALI PUBLIC LIBRARY
PRADE IYA SABHA
SAMMANTHURAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10050
894.8111

# நீ

(கவிதைத் தொகுப்பு)

கவிஞர் அபூபக்கர்

முனீரா பப்ளிகேஷன்ஸ்
86, ஒல்ட் ரோட்,
காத்தான்குடி - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: அக்டோபர் 1981
வெளியீடு: முனீரா பதிப்பகம்
உரிமை: ஆசிரியருக்கு
அச்சுப்பதிப்பு: திருக்கணித அச்சகம்
மட்டுவில், சாவகச்சேரி.

விலை: ரூபா [redacted] 5/=

வரவுப்பதிவு எண் 10050
வகுப்பு எண் 894.8111

# NEE

(Collection of poems)

By: **Poet Aboobucker**
First Edition: **October, (1981)**
Publishers: **Muneera Publications**
Printers: **Thirukkanitha Printing Works**
**Madduvil North, Chavakachcheri.**

Price: **Rs.15/-**
(Copyright reserved)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR REFERENCE
USE ONLY

# நுழையுமுன் ...

இது எனது நான்காவது கவிதை நூல். அவ்வப்போது எழுதிய கவிதைகளின் தொகுப்பு இது. இவற்றுட்சில பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தவை. பல எனது புத்தக அறையில் நீண்டகால வாசம் அனுபவித்தவை.

பெரும்பாலும் இந்நூலிலுள்ள கவிதைகள் யாவும் நாளைய சமுதாயத்தில் தோன்றப் போகும் மனிதனுக்காக இயற்றப்பட்டவை. நாளை வரும் மனிதனின் உணர்ச்சிகளைத் தூண்டி, அவனை நாளைய உலகின் ஜீவ நாயகனாக ஆக்குவதற்காக எழுதப்பட்டவை. புலரித் தேரில் ஏறிவரும் ஆதவனாய், நாளை உதயமாகும் மனிதனே எனது கவிதைகளின் கதாநாயகன். அவன் உயர்ச்சிக்கு வழிகாட்டுவதே எனது பொறுப்பு.

சாய்ந்தமருது,
கல்முனை:
15-10-81

கவிஞர் அபூபக்கர்



MIR ALI PUBLIC LIBRARY
PRADESHIYA SABHA
SAMMANTHURAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


1. அல்லாஹ்.... அல்லாஹ்....
2. மாண்ட கவி பாடுகிறான்!
3. செல்வ மகனே!
4. தாய்நாடு விளங்க...
5. வேட்கை
6. சவ்வால் இளம் பிறையே!
7. நீ!
8. பெண்ணே!
9. இளைஞரே! எழுக!
10. மேற்கின் போக்கு
11. ஏ மானிடனே!
12. பனித்துளியும் சூரியனும்
13. எல்லாம் உமதே!
14. போராட்டம்
15. தோல்வி
16. தாய்மை
17. புதிய இல்லம்
18. மகனே! கேள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்

அன்பால் என்னை
ஆளுமென் நண்பன்,
பண்பால் உயர்ந்து
பர்வதம் போலாய்
நின்று விளங்கும்
நேசன், சான்றோன்,
என்பால் மிகுந்த
அக்கறை கொண்டோன்,
கன்னல் போன்ற
**கவிஞர் அப்துல்**
**காதர் லெப்பைக்**
கிந்நூல் அர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதி

உறைபனிக் குளமாய்
உயிரிலாப் பண்டமாய்
கறைகளின் ஊற்ருய்க்
கிடந்தவென் நெஞ்சினை
நிறைகடல் போலாய்
நிமிர்ந்திடச் செய்தவென்
இறையினை உளத்தால்
ஏத்தியே பணிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அல்லாஹ்.... அல்லாஹ்....

திருவினுந் திருவாய் நல்ல
திவ்விய ஒளியி னூற்றாய்
உருவிலான் ஆகி எங்கும்
உறைந்திடும் ஏஎன் அல்லாஹ்!
கருவியாய் இயங்கு மென்தன்
'கல்பி'லே எழுந்த் வேட்கை
உருவிநான் கொட்டு கின்றேன்;
உயிரத்ற் களிப்பாய் அல்லாஹ்!

உள்ளிலே உண்மை வேண்டும்;
உயர்வுறும் நேர்மை வேண்டும்;
கள்ளமில் 'கல்பு' வேண்டும்;
கருத்தினில் தூய்மை வேண்டும்;
பள்ளமில் பாதை போன்ற
பாங்குறு வாழ்க்கை வேண்டும்;
வெள்ளையாய் இதயம் மின்ன
வல்லவா, உதவ் வேண்டும்.

உன்னையான் எண்ணி என்றும்
இறைஞ்சுதல் செய்தல் வேண்டும்;
என்னையே ஆய்ந்து நாளும்
எண்ணுதல் புரிய வேண்டும்;
கன்னலாய் இனிக்கும் உன்தன்
காதலின் மதுவை மாந்தி
என்னையான் மறந்தே உன்னில்
ஒன்றியே கலக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இங் காளும் என் தன்
அகத்தினை ஆள வேண்டும்;
உன்னை என் நெஞ்சி ருத்தி
யாவுமே செய்ய வேண்டும்;
மின்னலும் இடியு மிங்கே
மேவுமென் உளமே யாகித்
துன்னுமிவ் வுலகை யானும்
தியங்கிடச் செய்ய வேண்டும்.

குன்றினை ஒட்டி நூற்போல்
குடிசையொன் றெனக்கு வேண்டும்;
மன்றலைக் காவு தென்றல்
மருங்கிலே வீச வேண்டும்;
என்றுமென் கவலை நீங்கி
இனிதுற வாழ வேண்டும்;
துன்னுமுன் புகழ்து தித்துத்
துயரையான் மறக்க வேண்டும்.

துள்ளிடும் அருவி வீழ்ச்சி
தாளமாய் ஒலிக்க வேண்டும்;
கள் தரும் போதை யூட்டக்
காதலி ஒருத்தி வேண்டும்;
புள்ளிமான் போல யானும்
புவியெலாம் துள்ள வேண்டும்;
அள்ளிஉன் அன்புத் தேனை
அருந்தியே கிறங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூவுமென் குரலைக் கேட்டுக்
காசினி கிறங்க வேண்டும்;
பாவலர் யாரும் என்னைப்
பணிந்துவாய் மூட வேண்டும்;
கேவுமென் அழுகை யாலிக்
காசினி மக்க ளெல்லாம்
தூவுகண் ணீரைச் சிந்தித்
தேம்பியே அழுதல் வேண்டும்.

எண்ணிய பணிகள் யாவும்
ஏதிலா தியற்றல் வேண்டும்;
திண்ணிய இதயத் தாலித்
தரணியை வெல்ல வேண்டும்;
விண்ணிலே விளங்கு மீனுய்
வைகறை உணர்த்த வேண்டும்;
கண்ணொளி இழந்த போதும்
கருத்தொளி வீச வேண்டும்.

கல்லதன் 'திக்ரு' கேட்கும்
காதுகள் எனக்கு வேண்டும்;
புல்லதன் நெஞ்சு காணும்
பார்வையும் எனக்கு வேண்டும்;
அல்லிருள் கடியு மந்த
அம்புலி போல என்தன்
'கல்பி'ருள் கடிய உன்தன்
கருணையின் ஒளியும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையான் பழித்தே உன்னைப்
போற்றுதல் செய்ய வேண்டும்;
அன்னையின் பாத சொர்க்கம்
அடைந்துநான் மகிழ வேண்டும்;
சொன்னசொல் தவரு திங்கே
செய்திடும் வலிமை வேண்டும்;
மின்னுமுன் கருணை யாலென்
மனத்திருள் போக்க வேண்டும்;

புவியினை விட்டு யானும்
பிரிந்துனை அடையு முன்னே
கவிதைகள் கோடி செய்து
களிப்புடன் இசைக்க வேண்டும்;
தவிக்குமிவ் வுலக மக்கள்
நெஞ்சிருள் நீக்கி வைக்க
அவியுமென் கவிதைத் தீயால்
ஒளித்திரள் காட்ட வேண்டும்.

உலகெலாம் வாழும் மக்கள்
ஒன்றெனக் கூட வேண்டும்;
அலகிலாச் சாதி பேதம்
அழிந்தொழி படுதல் வேண்டும்;
துலங்குமுன் உண்மை யின்கீழ்
துல்லிய ஏக வீடாய்
இலங்குமிவ் வுலகை யானும்
இறக்குமுன் காண வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென் வேட்கை யெல்லாம்
விரும்பிநீ அருள வேண்டும்;
ஈண்டைஉன் கருணை இன்றேல்
என்றுமே மீட்சி இல்லை;
கூண்டிலே ஏங்கி நிற்கும்
குருவிநான்; தளையை விட்டுத்
தாண்டியே பறக்க நீயும்
தயவுடன் உதவ வேண்டும்.

(1967)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மாண்ட கவி பாடுகிறுன்!

நூறு வருடம் சென்றபி'னர்
நொந்து படைத்த என்நூலின்
சாறு பருகிச் சிந்தையினுல்
சுவைத்து மகிழும் என்அன்பா,
ஆற அமரச் சுவைக்குமு'னே
ஆரோ உலகில் யானறியேன்;
தேறும் உளமும் எனக்கில்லை,
தெரிந்து கொ'ளவும் வழியில்லை.

நூருண் டுக்கு முன்னேயான்
நொந்து நொந்தே குரல்தந்தேன்;
மீறி நின்ற அழகின்மேல்
மயங்கி இசைத்தேன்; அக்காலை
ஆறு தல்கள் தரவேனும்
அணுகி வந்தோர் எவருமி'லை;
தேறி என்தன் பாடலினைச்
செவியில் வைத்தோர் யாருமி'லை.

தனியாய் நின்ற குயில்போலாய்த்
தளர்ந்த குரலால் இசைதந்தேன்;
பனியாய்ப் படுத்த இதயத்தைப்
பொங்கும் நதியாய்த் திறந்திட்டேன்;
எனினும் எவரும் என்நதியில்
அடியை யேனும் நனைக்கவி'லை;
இனிதாய் இசைத்த எனையேனும்
அன்பாய்ப் பார்த்தோர் யாருமி'லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தன் இதயப் பூங்காவில்
அன்று பூத்த மலர்களையான்
உன்தன் இதய மகிழ்ச்சிக்காய்
உருவிப் படைத்தேன் நிவேதனமாய்;
அந்தோ! அவற்றைச் சீயென்றே
அடிகள் கொண்டு சிதைத்திட்டாய்;
சிந்தை சிறிதும் இல்லாமல்
சினந்தாய், எள்ளி நகைசெய்தாய்.

அன்று படைத்த மலர்களையே
இன்று தேடி நுகர்கின்றாய்;
என்றோ என்தன் இதயத்தில்
எழுந்து வளர்ந்த நம்பிக்கைக்(கு)
இன்று கொடுத்தாய் ஒருயிரை,
இதயம் மகிழ வழிசெய்தாய்;
பொன்று என்தன் ஆன்மாவின்
நன்றி கோடி உனக்கையா.

அன்றங் கிசைத்த குரலைத்தான்
இன்று கேட்டு மகிழ்கின்றாய்;
நன்று, நன்று, நாளுண்டு
நீங்கிச் சென்ற பின்னேனும்
இன்றென் இசையில் கட்டுண்டாய்,
இதயம் கலந்தாய், இன்புற்றாய்;
என்தன் இதயம் களிகொள்ள
இதுவே போதும், போதுமையா!

(1974)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. செல்வ மகனே!

என்தன் நெஞ்சில் அகன்ற கனவாய்
குந்தி இருந்து குவலயம் பார்க்கும்
தணியா வாஞ்சை நெஞ்சிற் கொண்டே
தனியாய் இந்தத் தரணியில் ஒருநாள்
மல்லிகைச் செடியில் மலர்ந்த பூவாய்
பொல்லா மனித ரிடையே பிறந்த
அன்புக் கொழுந்தே, ஆசைக் குழந்தாய்,
இன்ப வானில் எழுந்த நிலவே!

அவலக் குரலும் ஆசைப் பிளிறலும்
கவலும் மனிதர் கிளப்பும் முனகலும்
ஓயாப் பகையும் ஒழியாப் போட்டியும்
தீயாய்ச் சூழ்ந்து தீய்க்கும் இந்தப்
புனிதம் இல்லாப் புவியின் கடையில்
புனலாய்ப் புதிய மழையின் முகிலாய்
வருவாய் என்தன் வன்னச் செல்வ,
திருவாய் இந்தக் கடையின் மனிதர்
உன்னைக் கருதி உள்ளம் தேறி
துன்னும் அமைதி துய்க்கப் பெறுக.

நீசப் புவியின் நிமிர்ந்த பார்வையில்
ஆசை வைத்தும் அன்பை இழந்தும்
பாட்டை தவறிப் பதறும் வணிகர்
கூட்டத் திடையே கலங்கரை விளக்காய்
செல்வ மகனே, செல்லும் வழியைத்
துல்லிய மாகத் தெரிவி; அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பார்த்தே உன்வழி தொடர்ந்து
நன்மை பெற்று நலங்கள் உறுக!

MIR ALI PUBLIC LIBRA
PRADESHIYA SABHA
SAMMANTHURAI

உதயப் பொழுதில் ஒளிரும் கதிராய்
இதயத் திருளை அகற்றும் திறனை
மகனே, பெறுவாய்; மனிதர் உன்னால்
இகத்தில் ஒளியை அடைந்து மகிழ்க.

நம்பிக் கையின் நட்சத் திரமாய்
உம்பர் தனிலே ஒளிரும் நிலவாய்
உன்னைக் கருதி என்தன் உயிரைத்
தின்னத் தந்து சிறப்பாய் வளர்த்தேன்;
வன்னச் செல்வ, வளர்த்துக் கொண்ட
என்தன் ஆவல் அழியா வண்ணம்
உதயப் பொழுதை உணர்த்தும் உடுவாய்
இதயங் களுக்குன் ஒளியை உணர்த்து;
பாவக் கறைகள் பனியாய் உருகத்
தாவும் உன்தன் தருமப் பணிகள்
கிழக்கு வானில் கிளம்பும் சுடராய்
விளங்க என்தன் வாழ்த்து மகனே!

(1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தாய்நாடு விளங்க . . .

இறைவா! என்தன் தாய்நாடிங்(கு)
இனிது விளங்க அருள்செய்வாய்;
நிறைந்த வளமும் நிம்மதியும்
நீண்டு வளர அருள்புரிவாய்;
பொறையும் புகழும் புண்ணியமும்
பொன்ற திருக்கத் துணைசெய்வாய்;
கறைகள் நீங்கி வாழ்வினிலே
களிப்பு நிறையத் தயைசெய்வாய்.

ஓடிச் செல்லும் அருவிகளில்
இனிமை பொங்க அருள்செய்வாய்
பாடித் திரியும் பறவைகளின்
புளகம் வளரத் துணைபுரிவாய்;
கூடி உழைப்போர் கைகளெலாம்
குலவி ஓங்க உதவிடுவாய்;
கோடி மனங்கள் ஒன்றுபடக்
கோமானே! நீ துணைசெய்வாய்.

காடும் மேடும் கழனிகளும்
கவினுர் நிலனும் கார்வானும்
வீடும் ஓடும் கங்கைகளும்
வளன்கள் பொங்க அருள்செய்வாய்;
ஆடும் காற்றும் காய்கனியும்
அமுதம் படைக்கும் அருங்கரமும்
நீடு பயன்கள் நிறைவாகத்
தரவே இறைவா! துணைசெய்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியால் சமயம், சாதியினால்
மாற்ற முற்ற என்நாட்டார்
இழிந்த் கொள்கை இல்லாமல்
உளமும் உயிரும் ஒன்றாகி
விழுமம், வென்றி எல்லாமும்
வாய்க்கப் பெற்றுப் பல்வருடம்
உழுவ லன்பால் பிணைப்புண்டே
இசைந்து வாழ அருள்செய்வாய்.

கருணை கொண்ட செம்மல்கள்,
கவிதை இயற்றும் புலவர்கள்,
பொருளை வேண்டா மனங்கொண்டோர்,
பொருளை வழங்கும் புரவலர்கள்,
அருளும் அன்பும் ஒருசேர
அமைந்த் அறிஞர் பெருமக்கள்
உருவிற் சிறிய என்நாட்டில்
உதிக்க இறைவா! அருள்செய்வாய்.

காடாய்த் திரண்ட மேடெல்லாம்
களனி யாக மாற்றிவிடு;
சோடை கண்ட நதிவாயில்
ஜீவன் புதித்தாய் ஊதிவிடு;
வாடிப் போன செடிமீண்டும்
வளர்ந்து பூக்கச் செய்துவிடு;
கோடி மணிகள் என்நாட்டின்
கருப்பைக் குழியில் வளரச்செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தன் நாட்டு மானிடரின்
ஆசை, ஆணை, வாக்கெல்லாம்
உன்தன் உண்மைச் சூரியனின்
ஒளியை ஏற்கத் துணைசெய்வாய்;
பொன்று உன்தன் பேரருளின்
பனியைக் கொட்டி அவர்நெஞ்சில்
அன்பின் ஈரம் படிதற்கே
என்றும் அருளைச் சொரிவாயே.

(1974)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வேட்கை

நதிக்கரையில் நான்வாழ நல்லதொரு சிறுகுடிசை
நிறுவ வேண்டும்;
குதிக்கின்ற நீரோடைச் சலசலப்பில் என்னுள்ளம்
கிறங்க வேண்டும்;
கொதிக்கின்ற வெயிற்கதிர்கள் குதிக்கின்ற நதிப்
குலவும் போது [புனலைக்
துதிக்குரிய பேரிறைவன் குதித்தாடும் களிநடனம்
தெரிய வேண்டும்.

காலைஇளந் தென்றல்வந் தென்குடிசைச் சிறுகதவைக்
கொட்டுங் காலை
வாலைஇளங் குமரியவள் நினைவோடு துயில்நீங்கி
வருதல் வேண்டும்;
சோலையிலே மலர்கின்ற பூக்களைவான் பனிவந்து
தழுவு முன்னர்
மாலையென அழுதழுது சிந்துகின்ற என்கண்ணீர்
முத்த வேண்டும்.

சோலையிலே பாடுகின்ற குயில்களெ'லாம் எக்காலும்
பாட வேண்டும்;
சாலையிலே திறந்துள்ள மதுக்கடைகள் திறந்தபடி
சிரிக்க வேண்டும்;
காலையிலும் மாலையிலும் கோப்பையிலே மதுவேந்திக்
கொண்டு நிற்கும்
வாலையவள் எப்போதும் வாட்டத்தை உணராமல்
வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றருகே செல்கின்ற நதிஎன்றன் மனைதழுவிக்
குலவ வேண்டும்;
அன்றலரும் பூக்களெலாம் நதிக்கரையில் சிந்திஎழில்
அளிக்க வேண்டும்;
தென்றலிலே தவழ்ந்துவரும் வீணைஇசை இதயத்தைத்
தாக்க வேண்டும்;
ஒன்றித்த் உள்ளத்தோ டியற்கைதனை இணைந்தின்பம்
உறிஞ்ச வேண்டும்.

அம்புலியை மடியினிலே அழகாக் இருத்திவிளை
யாட வேண்டும்;
செம்பொன்னாய் மின்னுகின்ற செங்கதிரைச் சிர
சொருக வேண்டும்; [சினிலே
உம்பரத்ன் படுக்கையிலே விழிபுரட்டி விளையாடும்
உடுக்க ணத்தை
வம்புக்குக் கிட்டியபின் வருகின்ற கோபத்தை
வாங்க வேண்டும்.

த்னிமையிலே மனங்கொண்ட காதலியோ டிருந்
தங்க வேண்டும்; [தொன்றாய்த்
பனிபோன்ற வாழ்வென்னும் சாறுதனைப் பற்றின்றிப்
பருக வேண்டும்;
இனிமைக்குப் பேர்போன கனிமரங்கள் இருமருங்கும்
இருக்க வேண்டும்;
கனிவான இதயத்தின் அழகையொலி காற்றோடு
கலக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள்மண்டிப் புகையுண்டு கிடக்கின்ற வீட்டினிலே
என்கை யுள்ள
எரிதீபம் ஒளியூட்டி உயிரூட்டி அணையாமல்
எரிய வேண்டும்;
மருள்கொண்டு நோயுற்றுக் கிடக்கின்ற மனிதர்க்
மொழிக ளெல்லாம் [கென்
மருந்தாகி மயக்கத்தைத் தெளிவித்துக் குணமாக்கி
மிளிர வேண்டும்.

அழகென்னும் உலகினிலே அன்பென்னும் இளமாதை
அணைய வேண்டும்;
பழகுதமிழ் மொழியினிலே பலகோடிப் பாக்களையான்
புனைய வேண்டும்;
வழக்கற்ற பழைமையெனும் பண்பாட்டை யானிங்கு
வளர்க்க வேண்டும்;
இழிவான புதுமையெனும் குப்பைகளைத் தீமூட்டி
எரிக்க வேண்டும்.

(1969)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சவ்வால் இளம்பிறையே!

வாராய், சவ்வால் இளம்பிறையே!
வாழ்த்தும் மக்கள் கண்மணியே!
பாராய், மாந்தர் உன்வரவைப்
பார்த்து மகிழும் ஆவலினால்
தூரே வானின் பாதையிலே
திறந்த விழிகள் பதித்துன்தன்
ஆரா வத்னம் தேடுவதை
அணுகிக் காண வாராயே!

இனிய உன்தன் இளநெற்றி
எடுத்துக் கூறும் செய்திதனை
நனிது கேட்கும் வாஞ்சையினால்
நலிந்து போய்நாம் இருக்கின்றோம்;
தனியாய்ப் பிரிந்த எமதான்மா
துயரால் மெலிந்த எமைமீண்டும்
இணைய வார்த்தை இசைவோடே
ஒன்று தானும் சொல்லாயோ?

பரந்த வானில் சுதந்தரமாய்ப்
பணிந்து நகரும் பிறையே! நாம்
இரந்து நிற்கும் கீழ்மையினால்
இயக்க மற்றுக் கிடக்கின்றோம்;
விரிந்த மண்ணில் நடைகண்ட
தாழ்கள் தளையைக் கொண்டனவே;
புரிந்தே எங்கள் இழிநிலையை
புதிதாய்ச் சாந்தி சொல்லாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளும் பிறையும் எங்களினம்
வ்ரிந்த சின்னம் என்றொருநாள்
மூளும் தீயின் கொழுந்தாய்நாம்
மூச்சு விட்டு மகிழ்வுற்றோம்;
வாளா நிலையில் இன்றோநாம்
வழுக்கி விழுந்த பானையென
மீளா நிலையில் உடைந்திங்கே
பலவாய்ச் சிதறிக் கிடக்கின்றோம்.

துருக்கன் என்ற சொல்கேட்டால்
திராணி இழந்து கிலிகொண்டே
உருகி உள்ளம் உடலாட்டம்
உற்று நின்ற பிறநாட்டார்
துருக்கா என்று தலையின்மேல்
தாளை வைக்கும் நிலைக்கின்று
குறுகி விட்டோம், யார்மேலே
குற்றம் என்று கூறுயோ?

புவியைச் சுற்றி வான்வழியே
பயணம் செய்யும் பிறையே! நீ
அவியும் தோல்வித் தீயினிலே
ஆழ்ந்த முஸ்லிம் அழுகைபார்;
நவமே கண்ட மஸ்ஜிதெல்லாம்
தகர்ந்து விழுந்த நிலையும்பார்;
குவிந்த மாடத் தூபிகளும்
குலைந்த் புதினம் காணுயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமை செய்த திருகுர்ஆன்
புழுதி படிந்து போனதுபார்;
இதயத் தூய்மை தருநபியின்
இனிய வாழ்வின் ஒளிக்கம்பம்
சதிரை இழந்து சதம்போலாய்ச்
சிதறி உடைந்து கிடைப்பதுபார்;
பதுமை போலாய் யாவருமே
பேச்சை இழந்து போனமைபார்.

பாராய், முஸ்லிம் பிரயாணி
பாதை தப்பிக் கலங்குவதை;
தேராய், அவனின் ஒட்டகையும்
திமிறிக் கொண்டே ஓடுவதை;
யாரோ இந்தப் பேடியென
இழிந்து கூறும் நிலைக்குன்றன்
வீரம் செறிந்த சமுதாயம்
வந்து நிற்றல் பாராயோ!

மறுவே இல்லா அழகியஉன்
மாண்பார் வதனம் மொழிந்துவரும்
அறிவால் உயர்ந்த முஸல்மானின்
அழகார் சமூக வரலாற்றை
அறவே மறந்து கோழைகளாய்
ஆகிக் கொண்டோம், அத்னுலே
சிறப்பை இழந்த எமைக்கண்டு
சிரித்து விடவா வருகின்றுய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அழகார் மனைகளிலே
ஏவல் செய்தெம் அடிமைகளாய்
தங்கள் வாழ்வைத் தந்தவர்கள்
தளையை எங்கள் தாள்களிலே
தொங்க விட்டுத் தொழும்பர்களாய்த்
துரத்தி விட்டார்; வீரமுடன்
பொங்கி யவெங்கள் வரலாறு
புரண்ட இழிவைப் பாராயோ!

இருண்ட வாழ்வின் பாதையிலே
ஒளியை வீசும் ஈமானின்
திரண்ட கனலின் பொறியதனைத்
தவற விட்டோம்; அதனாலே
மருண்ட விழியின் பார்வையினால்
பாதை தவறி விடமற்றோர்
உருண்டு வண்டாய் முன்னேறி
உயர்ந்து நிற்றல் காணாயோ!

தீயில் விழுந்த பூச்சிகளாய்த்
திராணி இழந்த வீரர்களாய்
ஓயா தேங்கும் கைதிகளாய்
உணர்வே இல்லா அடிமைகளாய்த்
தேய்ந்து நிற்கும் முஸல்மான்கள்
தங்கள் உயர்ந்த நிலைமீண்டும்
பாய்ந்து பெறவே பிறையே! நீ
புத்தி ஒன்று புகலாயோ!

(1966)

10050



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. நீ!

வானில் நீந்தும் விண்மீனாய்
வளர்ந்து செல்லும் தண்மதியாய்
தானே ஒளிரும் தினகரனாய்
தரணி பெற்ற பெருமகனாய்
வானோர் போற்றும் மானிடனாய்
வந்தாய், மனிதா! பின்னும்நீ
ஏனோ புழுவாய் நெளிகின்றாய்?
எழுவாய், உண்மை அறிவாயே!

உன்னை நீயே உணர்வாயேல்
உண்மை புரிவாய்; உலகங்கள்
உன்னை நம்பி இருப்பதையும்
உணர்ந்து தெளிவாய்; உயிர்பெறுவாய்;
இன்னும் ஏனோ துயில்மேலே
இச்சை யுற்றுக் கிடக்கின்றாய்?
சின்னஞ் சிறிய பூமியிலே
சீறி வீசும் புயலாவாய்!

அறிவை இழந்து சிறுபுழுவாய்
அடங்கி வாழும் மனிதா! நீ
முறையாய் உன்னைப் புரிந்தால்உன்
மனத்தில் உதிக்கும் எண்ணங்கள்
இறைவன் இட்ட 'தக்தீ'ராம்;
ஐயம் வேண்டாம்; அஞ்சேல்நீ;
சிறப்பு வாய்ந்த அமரத்'வ
சிருஷ்டி; உண்மை உணராயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானில் ஒளிரும் மீனும்நீ,
வளர்ந்து செல்லும் மதியும்நீ;
கானம் இயற்றும் குயிலும்நீ,
காட்டில் வாழும் அரியும்நீ;
வேனிற் காலக் காற்றும்நீ;
வேத இறையின் 'சிர்'ரும்நீ;
ஏனோ இன்னும் உன்னை நீ
எண்ணிப் பாரா திருக்கின்றாய்?

தெளிந்த வானில் நகர்ந்துசெ'லும்
பரிதிக் கோளம் நீயாவாய்;
வளியில் ஆடி மணம்வீசும்
வண்ண மலரும் நீயாவாய்;
இழிந்த மண்ணின் கருப்பையுள்
இணைந்த் பொன்னும் நீயாவாய்;
செழித்த உன்தன் ஆன்மாவைச்
சிந்தித் துணர மாட்டாயா?

படைப்பி லுற்ற பொருளெல்லாம்
பணிந்தே உன்னைத் தொழுதல்பார்;
தடையாய் நின்ற 'சிதுரா'வும்
திறந்து வழியை விட்டதுபார்;
இடையே உனக்கும் பரனுக்கும்
இருந்த் திரையும் கிழிந்ததுபார்;
படைத்த இறையின் அதிகாரப்
பிரதி நிதியும் நீயன்றோ!

(1966)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பெண்ணே!

வானுலகின் வளர்மதியாய் வைய கத்தின்
வளருயிராய் வடிவமைப்பாய் வந்த பெண்ணே!
கூன்,குருடு முடம்போலாய்க் கொட்டி லுக்குள்
குறுக்கமுடன் ஏனோநீ குந்தி விட்டாய்?
கானகத்தின் குயில்போலாய்ச் சமுதா யத்தின்
கொப்பினிலே நின்றினிய குரல்வி டுப்பாய்;
மோனநிலை போதுமினி முகில்கி ழித்தே
மேதினியின் இருள்கடிய வெளியே வாராய்!

ஆண்மையதன் அழிவினிலே ஆக்கம் செய்தே
அழகார்ந்த சிருஷ்டிகளைப் படைப்ப வள்நீ;
மேன்மையுடன் உலகுக்கே உயிர ளித்து
மேதினியை அழியாமல் காப்ப வள்நீ;
ஆண்மகனின் யாழுக்குச் சுருதி யாகி
அரிதான நாதத்தை இசைப்ப வள்நீ;
பான்மையிலா ஆண்மகனின் சமுதாயத்தைப்
பக்குவமாய்ச் சீரமைக்கும் சிற்பி யும்நீ!

ஏழ்மையிலே இன்புற்ற ஆயி சாவின்
இனம்வழியே பிறந்திட்ட இனிய வள்நீ;
வாழ்க்கையிலே குணக்குன்றாய் வளர்ந்து நின்ற
வடிவார்ந்த பாத்திமாவின் வாரி சும்நீ;
தாழ்வுற்ற உலகுக்கோர் திரள மாகத்
தாஹாவை ஈன்றிட்ட ஆமி னாநீ;
பாழுற்ற சமூகத்தை இந்நாள் ஏனோ
பாராமல் மூலையிலே வாழு கின்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலையிலே சிறைக்கைதி போலாய் இன்று
முக்காட்டுத் திரைக்குள்ளே வாழும் பெண்ணே!
பாலையிலே புதிதான சமூகமொன்றைப்
படைத்திட்ட உன்வலிமை எங்கே? எங்கே?
தோலுரிக்க வந்தஉமர் முன்னால் நின்று
'தன்ஸீ'லை உரைத்திட்ட திண்மை எங்கே?
காலிழந்த முடப்பெண்ணாய் மனையி னுள்ளே
கட்டுண்ட காரணமென் கூறி டாயோ?

'முல்லா'க்கள் கூறியதால் மூலைக் குள்ளே
மனைகண்டு விட்டாயோ? மயங்கி னாயோ?
இல்லாத சட்டங்கள் இயற்றும் 'முல்லா'
இருமைக்கும் பயனளியார், அறிவாய் பெண்ணே,
பொல்லாத அவர்மனைவி மக்கள் தம்மைப்
புதுக்கிவிட முடியாதார் கூற்றை யெல்லாம்
கல்லாக வீசியெறி; குர்ஆன் ஒன்றைக்
கையிலெடு; புறப்பட்டு வெளியே வாராய்!

ஆடையிலா மேல்நாட்டுக் கலாசா ரத்தால்
அரியபெரும் உன்அறிவை இழந்தி டாதே;
கூடையிலே கட்டுண்ட குப்பை போலாய்க்
கருகிவிடும் காலமதற் கருகே உண்டு;
பாடையிலே செல்லும்நாள் பார்த்தி ருக்கும்
பிணியாளிப் பேர்வழியை இன்னும் ஏன்நீ
மேடையிலே ஏற்றிநிதம் மெருகு பூசிப்
பார்த்துள்ளம் களிக்கின்றாய்? முட்டாள் பெண்ணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நாட்டில் உளமில்லை, மேன்மை இல்லை;
மேதினியின் உயிரான அன்பும் இல்லை;
தோல்கொண்ட வெண்மைநிறம் மேலை நாட்டின்
த்யவறியா இதயத்தில் சிறிதும் இல்லை;
மேல்மினுக்கால் விஞ்ஞான மினுமி னுப்பால்
மேன்மையிடம் பெற்றுவிட்ட மேலை நாட்டின்
காலறுந்து முடமான கலாசா ரத்தைக்
கைப்பிடிக்க நீயுமொரு களங்கம் தானு?

கீழ்நாட்டின் தெய்வீகக் கதிர்ப் பிழம்பாய்க்
கீர்த்தியுடன் இவ்வுலகில் பிறந்த வள்நீ;
சீழ்கொட்டும் புண்ணுைத்த உலகி னுக்குச்
சீராட்டிப் பணிபுரியும் தாதி யும்நீ;
வாழ்வென்னும் யாழுக்குச் சுருதி போலாய்
விளங்கிவரும் பேரன்பின் ஜீவ னும்நீ;
பாழ்பட்ட மேல்நாட்டைப் பின்னும் ஏன்நீ
பின்பற்றி அழிகின்ருய்? பாவிப் பெண்ணே!

மனுக்குலத்தின் மாமணியே! மங்கை யே!எம்
முஹம்மதுவை மூஸாவை ஈன்ற வள்நீ;
அனைத்துலகும் உன்கீழ்த்தான்; சுவன நாடும்
அருமந்த் உன்பாதத் தடியி லேதான்;
சினந்தொருகால் நீஇங்கு சீறி விட்டால்
சிரித்திடுமிப் பாருலகம் சிதைந்து போகும்;
கனைத்தாலே போதுமடி ககன மெல்லாம்
காலடியில் வந்துவிழும்; கலங்கி விம்மும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்அருமைத் தாய்க்குலமே! இன்னும் ஏன்நீ
எழும்பாமல் கிடக்கின்ருய் எழுந்து வாராய்;
இன்னுமொரு முஹம்மதுவை இணையில் லாத
ஓருமறை அஞ்சாத அஸதுல் லாஹ்வை
மன்னுபுகழ் அடைந்திட்ட ஆலம் கீரை
மசியாமல் மயங்காமல் ஈன்று தாராய்;
இன்னும்நீ மலடாகிப் போக வில்லை,
இன்னும்உன் கருவறையும் சோர வில்லை.

நபித்துவத்தை அடுத்தபெரும் சக்தி உன்தன்
தாய்மையெனத் தலைநிமிர்ந்து நானும் சொல்வேன்;
புவித்தரையில் வான்வெளியில் பெருகி யுள்ள
பொருட்கெல்லாம் அடிப்படையும் தாய்மை யேதான்;
சபலமிலாத் தாய்மையதன் பெருமை யேஇச்
சமுதாய வளர்ச்சிக்கும் ஆணி வேர்;உன்
சிவைமட்டும் அறுந்தழிந்து போகு மாயின்
சமுதாயம் சரிந்துவிடும்; தலைகீ ழாகும்.

வீட்டடங்கி வாழ்ந்தசிறு வாழ்வு போதும்;
வெளிவருவாய் வைகறையின் பொழுது போலாய்;
கேடடர்ந்த சமூகத்தின் கங்குல் ஓட்டிக்
கதிர்விடுவாய்; தாய்மையதன் யாழை மீட்டிப்
பாடுபடும் பாட்டாளி மகனுக் காய்நீ
பணிவிடைகள் பலசெய்வாய்; பரிச ளிப்பாய்;
நாடுயர உன்பங்கை ஆற்று தற்குத்
தயங்காமல் தளைநீக்கி வெளியே வாராய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு கூறுமொரு பாத்தி மாவாய்
வாழ்க்கைதனை விளக்குகின்ற ஆயி சாவாய்
பரம்பொருளில் கலந்திட்ட ராபி யாவாய்
பணிபுரிய மனங்கொண்டு வருவா யானல்
உரம்பெற்ற சமுதாயம் ஒன்றிம் மண்ணில்
உருவாகும்; உயிர்பெற்றே ஓங்கி நிற்கும்;
வருவாயோ? இதுநான்என் வேட்கை நெஞ்சில்
வெடித்துதிரும் ஒருகேள்வி; விளம்பு பெண்ணே!

(1975)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. இளைஞரே! எழுக!

வீர அலியின் மரபினிலே
வந்து தித்த இளைஞர்காள்!
தூரே தொடர்ந்த பயணத்தைத்
துணிந்து செய்ய எழுவீரே;
பாரே நடுங்கும் 'தக்பீரி'ன்
முழக்கம் எங்கோ கேட்கிறது;
நீரும் ஆண்மைக் குரலாலே
நீட்டி முழங்க எழுவீரே!

நீங்கள் முழங்கும் தக்பீரின்
திண்மை தாங்க முடியாமல்
ஓங்கி உயர்ந்த வானத்தின்
உச்சி கிழிந்து போகட்டும்;
தாங்கா தியங்கும் சூரியனும்
தணலாய் எரிந்து கருகட்டும்;
தூங்கும் துன்னர் இதயங்கள்
துண்டு பட்டுச் சிதறட்டும்!

போரின் களத்தில் வெறிகொண்டே
பாய்ந்த புலிகள் நீரேதாம்;
ஆர்த்து வந்த அபுஜஹிலை
அரிந்து வைத்தோர் நீரேதாம்;
ஓரா திமிந்த ஒன்னரின்
உதிரக் கறையால் அறபுகளின்
கீர்த்தி மண்ணுக் கொருவண்ணம்
கொடுத்த கலைஞர் நீரேதாம்.

MIR ALI PUBLIC LIB
PRADESHIYA SA
SAMMANTHURA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மில்லாத் துள்ளலுடன்
எலிகாய் நின்ற இளைஞர்காள்!
குன்றை யொத்த வலிமைதனைக்
கொன்று வீரன் சிறிதேனும்
இன்றி வீணே கோழைகளாய்
இரந்து நிற்கும் நண்பர்காள்!
இன்று நுங்கள் செங்குருதி
உறைந்து விட்ட தெதனுலோ?

கொதிக்கும் வெந்நீர்ச் சாடியென
கொதித் தெழுந்த நும்குருதி
அதிர்ந்த குட்டை நீர்போலாய்
ஆறிக் கிடப்ப தெதனுலோ?
நொதித்துப் புரளும் ஆழியென
நிமிர்ந்தெ ழுந்த நும்ஆண்மை
உதிர்ந்த ரோஜா மலர்போலாய்
உறங்கி விட்ட தெதனுலோ?

உள்ளம் கொண்ட ஈமானை
உறுதி செய்ய முன்னொருகால்
துள்ளி எழுந்தே துன்னரைத்
தள்ளி வீழ்த்தப் போர்முனையில்
பள்ளி கொண்ட நீங்களெலாம்
பாதம் இழந்த நொண்டிகளாய்
பள்ளி அறையைத் தழுவியதன்
பொருள்தான் என்ன? புகல்வீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலரும் நாளைப் பொழுதினிலே
புதிதாய்த் தோன்றும் சமூகத்தின்
பளுவை இழுக்கும் ஒட்டகைகள்
புவியில் நீரே; ஆனாலும்
வலிமை வாய்ந்த முன்னணை
வளைத்து முறித்துக் கொண்டீர்கள்;
பளுவை நாளை எப்படி நீர்
புறத்திற் சுமந்து செல்வீரோ?

மோட்சம் ஈயும் சத்'யத்தை
மூடி மறைத்த பெருந்திரையை
மீட்சி வழங்கும் சுமானின்
வாளால் கிழிக்கும் நீரிங்கே
ஆட்டக் கார வேசிமனை
அண்டி நிற்கும் ஞானியராய்
பாட்டை தவறிப் பொய்மையெனும்
படுதா அன்றோ அணிந்துள்ளீர்!

வீர மென்னும் பால்பருகி
வளர்ந்த என்தன் இளைஞர்காள்
ஆரா யாமல் செய்தபிழை
உணர்ந்து விழிகள் திறவுங்கள்;
கோரப் பகைவர் ஊடுருவிக்
கொன்னை யிடுமுன் எல்லைகளை
நேராய்க் காக்க இப்பொழுதே
தக்பீர் முழங்கிப் புறப்படுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கா லத்தின் வரலாற்றை
எழுத்தில் வடிப்போர் நீரேதாம்;
புதிராய்த் தோன்றும் வாழ்க்கைதனைப்
புரிய வைப்போர் நீரேதாம்;
முதிரும் உலகப் பூங்காவை
முருகு செய்வோர் நீரேதாம்;
துதிக்கும் உங்கள் குரலாலே
தக்பீர் முழங்க எழுவீரே!

வீறு கொண்டே வையத்தை
வெற்றி கொண்டோர் நீரேதாம்;
மாறு செய்த எதிரிகளை
மடிய வைத்தோர் நீரேதாம்;
கூறு பட்ட சமூகத்தைக்
கூடச் செய்தோர் நீரேதாம்;
சீறிப் பாயும் வேங்கைகளாய்ச்
சினந்து பொங்கி எழுவீரே!

வீரம் பெறுவீர், வாளெடுப்பீர்;
விரிந்த தோளின் திறன்விரிப்பீர்;
ஓரப் பார்வை ஒழித்திங்கே
ஒன்றார் மருளும் விழிதிறப்பீர்;
கூர்வாள், குர்ஆன் இரண்டினையும்
கரத்தி லேந்திக் களம்செல்வீர்;
தீரக் குருதி வடித்தேநீர்
துன்றார் கொட்டம் அடக்கிடுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை மிகுந்த குர்ஆனின்
வாய்மை ஒளியில் நடவுங்கள்;
தந்தை போன்ற தாஹாவைத்
துணைக்குக் கூட்டிச் செல்லுங்கள்;
உந்தும் உங்கள் இடைவாளை
உருவிக் கையிற் பிடியுங்கள்;
இந்தப் புவியின் 'தக்தீ'ரை
எழுதி வைக்க எழுவீரே!

(1966)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. மேற்கின் போக்கு

மேற்குலகின் சிந்தனைகள்
மேதினியின் உயிரை வாங்கும்
தூக்குமரப் பெருங்கயிறாய்த்
தெரிவதைநம் கீழை நாட்டார்
ஏற்பதற்குத் துணியாமல்
இருக்கின்றார்; அவர்க ளுத்தை
நோக்கிவரும் நெடுங்கயிற்றில்
நீட்டிவிட விரும்பு கின்றார்.

மேற்குலகில் உளமில்லை,
மேலான அன்பும் இல்லை;
போற்றுதற்குத் தகுதியான
பண்பெதுவும் அங்கே இல்லை;
கூற்றத்தைக் கொண்டுவரும்
குறியற்ற அறிவே யல்லால்
ஏற்றத்தைத் தருகின்ற
அம்சங்கள் எதுவு மில்லை.

பெற்றவளை மகன்காணான்
பிறந்தவனைத் தாயும் காணாள்;
பெற்றவர்கள் இயலாமை
பெற்றுடலம் சோர்ந்து விட்டால்
பற்றுதற்கு விடுதியொன்று
பெற்றவர்க்குச் சொந்த மாகும்;
பெற்றகடன் கழித்தபிள்ளை
முறுவலுடன் பிரிந்து போவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீகம் என்னவென்றே
அவர்சிறிதும் அறிய மாட்டார்;
சாத்வீக வழியென்ருல்
சந்தையிலா என்று கேட்பார்;
ஊத்தையவர் உளமெங்கும்
அரசோச்ச பத்து நூறு
சாத்திரங்கள் ஆய்ந்துகூறிச்
சமராடி முன்னுல் நிற்பார்.

பழைமைதனை விரும்புகின்ற
பண்பாடு தமதே என்பார்;
பழங்கால மானிடரின்
பாங்கறியா நிருவா ணம்தான்
கிழவனையும் கவர்கின்ற
கீழான அவர்பண் பாடு;
வளமான வெண்ணுடலின்
வெறுமையின்றி வேறென் றில்லை.

மேல்நோக்கி உயருமவர்
மேன்மைமிகு நாக ரீகம்,
கீழ்நோக்கித் தாழுமவர்
கீழான பண்பா டெல்லாம்
தோல்மினுக்கித் தொடைகாட்டித்
தனக்காட்சி தந்து நிற்கும்
வேல்விழியார் சிறுவாழ்வும்
மைந்துதரும் அழகு மேதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்ததென்ன அவர்தெரிவு
செய்திட்ட அசத்ய வாழ்க்கை
இறந்துபடத் தற்கொலையை
ஏற்குங்கால் தொலைவி லில்லை;
மறந்தேனும் அவரடியை
மருவிவரும் மாந்த ரெல்லாம்
பிறந்தபயன் அடையாமல்
பேதையராய் அழிந்து போவார்.

மேல்நாட்டார் தந்திட்ட
மார்க்கமிலாத் தத்து வங்கள்,
தோல்காட்டும் நிறத்தாலே
தெரிந்திட்ட வர்க்க ஞானம்,
ஆல்போன்று வளர்ந்துவரும்
அவனியதன் மாந்த ருற்ற
கால்கட்டு களையவழி
காட்டுதற்கே உதவா அந்தோ!

கிழக்குலகில் மேல்நாட்டார்
கண்ணியெனக் கொளுத்தி வைத்த
விழிப்பில்லா மானிடனின்
விழிபோன்ற சிறுதீ பங்கள்,
அழல்போலக் கீழ்வானில்
உதித்துவரும் புதுக்க திர்கள்
வழுங்கொளியில் அணையுங்கால்
வந்திங்கே விட்ட தம்மா!

(1968)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MIR ALI PUBLIC LIBRA
PRADESHIYA SABHA
SAMMANTHURAI

## 11. ஏ மானிடனே!

தன்னை எண்ணிப் பாராமல்
துயிலைப் புணரும் மானிடனே!
இன்னே எழுவாய்; புதுவாழ்க்கை
ஒன்றை அமைப்பாய்; உயிர்பெறுவாய்;
வன்னக் குருகின் சிறகுகளில்
வாழும் வலியைக் கண்டேனும்
உன்னைத் தொடரும் சிறுவாழ்வில்
உயர்ச்சி யுற்றுக் களிகொள்வாய்.

தெய்வ மனிதா உன்வலியைத்
தெரிந்து கொள்ளத் தவறியதேன்?
மெய்யாய் இந்தச் சிறு'பக்கீர்'
மொழியும் வார்த்தை செவிகொள்வாய்;
வையம் வாழும் உயிரெல்லாம்
மோட்சம் காணும் நோக்கோடே
செய்ய கவிதை தருமிந்தச்
செந்நாப் புலவன் சொற்கேளாய்;

துன்பம் உற்றுக் கலங்குவதேன்?
துயரால் வதனம் வாடியதேன்?
தென்றல் தவழ்ந்த பூங்காவில்
தீக்கால் வந்து வீசுவதேன்
சின்ன யாழின் நரம்புகளும்
சிதறி உடைந்து போனதுமேன்?
துன்பங் கண்டு வாழ்வில்நீ
துணிவை இழந்து விட்டாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் துன்பம் சிறுவாழ்வைத்
தொட்டுச் செல்லும் புயலேதான்;
படர்ந்த் முள்ளே உரோஜாவின்
பொலிவுக் கான ரகசியமாம்;
இடராய் நிற்கும் ஏரல்தான்
இலங்கும் முத்துக் குயிருதும்;
அடர்ந்த கங்கும் இருப்பதனுல்
அன்ருே பக்லேத் தெரிகின்ருய்!

உன்னே நீயே இழிந்தவனுய்
எண்ணி மறுகல் கொள்ளாதே;
குன்று தன்னே மண்மேடாய்க்
கருதும் போது சரிந்துவிடும்;
இன்னும், கல்லே கண்ணுடி
என்று கருதின் உடைந்துவிடும்;
தன்னே அந்த இராஜாளி
தாழ்த்திக் கொண்டால் வீழாதோ?

பொன்னுர் மனிதா! நீஉன்னேப்
புழுவாய் எண்ணி மறுகாதே;
பின்னம் இல்லா உன்ஆடி
பலங்கொள் கல்லென் றெண்ணிடுவாய்;
மின்னும் வலிமை மிகுந்தவனுய்
மண்ணில் வாழ எண்ணுவையேல்
உன்னே அந்த 'குதீ'யென்னும்
அழலிற் புரளச் செய்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் அரசன் நீயெனினும்
ஆடம் பரத்தை அணுகாதே;
சூழும் துயரப் புயலிடையே
சுழலும் 'தர்வேஷ்' போல்நீயும்
வாழும் வழியைப் புரிந்திங்கே
வறிய நிலையில் வாழ்ந்திடுவாய்;
பாழும் ஆடம் பரமுன்தன்
புனித குறியைக் கொன்றிடுமே!

வழுவா நெறியில் எந்நாளும்
வையத் தில்நீ வாழ்வாயேல்
எழுவான் படுவான் எல்லாமும்
உன்னைப் பணிந்து நில்லாவோ?
முழுவான் எங்கும் மிதந்தோடும்
முழுமதி போலாய் ஒளிதந்தே
புழுவாய் இழிந்த பூமியிலே
புதுமை செய்யும் திறன்பெறுவாய்.

ஆக்கும் அல்லாஹ் உனக்கேதும்
ஆசு வைத்தா னோ? இல்லை;
ஊக்கம் இல்லாச் செயலால்நீ
உயர்வை இழந்து நிற்கின்றாய்;
ஏக்கம் உற்ற அலரியென
இருக்கும் காலம் வரையில்நீ
ஊக்கம் அடைய மாட்டாயே;
உண்மை பெறவும் மாட்டாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கும் ஆற்றல் உள்ளோன் நீ,
எனினும் அதனைப் புரியாதுன்
ஆக்கும் வலியைச் சிறையொன்றில்
அடைத்து வைத்தே இருக்கின்றாய்;
ஆக்காய் மனிதா! புதுமனிதன்;
அவனை உன்தன் சிறுய்க்குன்றின்
பூக்கும் புதிய பூசாவாய்
புதுக்கி வைக்க எழுவாயே!

மண்ணுக் கப்பால் சிறகுகளை
விரித்துப் பறந்து சென்றிடுவாய்;
மண்ணென் றேஉன் வாழ்விடமாய்
மனத்தில் எண்ணி மறுகாதே;
விண்ணும் விண்ணின் கோள்களுமே
விரும்பி வாழும் வீடுகளாம்;
எண்ணித் துணிவாய்; ஏற்றமுற
இன்னே பறந்து சென்றிடுவாய்.

குஞ்சுக் குருகாய் உயிர்வாழக்
கருதின் இன்னே செத்துவிடு;
நெஞ்சில் வாழ நசையுண்டேல்
வல்லூ றாக மாறிவிடு;
மிஞ்சும் அழலின் சாம்பரென
மண்ணில் வாழ எண்ணுதே;
அஞ்சா தெரியும் செந்தீயாய்
அனலைக் கக்கி ஒளிவிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சை உண்டு பழகிவரின்
நஞ்சே உயிரை இழந்துவிடும்;
அஞ்சா திந்தச் சிறுவாழ்வில்
அடையுந் துயரைத் தாங்கிவரின்
பஞ்சாய் இந்தப் பூமிதனைப்
புறமேல் ஏற்ற வலிமைவரும்;
பிஞ்சி லிருந்தே போராட்டப்
பயிற்சி பெற்றுப் பீடுறுவீர்.

மெலிந்த உரோஜா மலர்போலாய்
மென்மை யாய்நீ வாழாதே;
வலிந்த கல்லாய் இறுகிடுவாய்;
வலிமை பெறுவாய், கல்லாவாய்;
உலர்ந்த உன்தன் புழுதிகளை
அக்கிப் படையாய் மாற்றிவிடு;
வலிந்து தாக்கும் ஆன்மாவின்
பகைவ ரோடு போராடு!

எரியும் கனலின் வெள்ளத்தில்
அமிழ்ந்து நீந்திக் கவிழ்ந்திடுவாய்;
தெரிவாய், அன்பார் இபுராஹீம்
தீயில் குளித்துக் களிப்புற்றார்;
நரியாய் நாளும் ஏமாற்றும்
நாட்டம் கொண்டு திரியாதே;
அரியாய் நிற்பாய்; அரசனையும்
அஞ்சா திருப்பாய் மானிடனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி லிருந்து கனிச்சாரம்
கூறந்து பிழிவாய்; கனற்பொறியின்
'பொல்லாச்' செடியில் இருந்தே நீ
புதிய மலர்கள் பலகொய்வாய்;
அல்லி மலரின் பனித்துளியில்
அழகார் மணியைப் பெற்றிடுவாய்;
புல்லி யவாழ்வுப் பூங்காவில்
புயலை எழுப்பிப் பூரிப்பாய்.

விந்தை மனிதா! வைரத்தை
விழித்து வாழ்வின் வலிஅறிவாய்;
உந்தும் உன்தன் தனித்துவமாம்
உதய கதிரைக் கரமேந்திச்
சிந்தை வானின் இருள்நீங்கச்
சுடரை எங்கும் பரப்பிடுவாய்;
விந்தை யான வானுலகை
மனித் ஞகிக் கலக்கிடுவாய்!

தென்றற் காற்ருய்த் தண்டலையின்
தார்கள் தழுவிச் செல்லாதே;
உன்னி வீசும் கரும்புயலாய்
ஒசியும் மலர்கள் சாடிடுவாய்;
விண்ணைத் தழுவும் தீநாக்காய்
வளர்வாய்; புகையாய் வாழாதே;
கன்னற் பாகாய் உருகாமல்
குன்றின் வலிய கல்லாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகார் நெஞ்ச வீணைதனை
இன்னே தட்டி எழுப்பிடுவாய்;
பழகு தமிழிற் பலநூறு
பசுமைக் கீதம் கிளப்பிடுவாய்;
அழலாய் எரியும் பாலையிலே
அமிழ்ந்து புரண்டு சுழன்றிடுவாய்;
விழலாய்க் கழிந்த காலத்தை
விட்டுப் புதிது செய்வாயே!

வேங்கை போலாய்ச் சீறிடுவாய்;
விந்தை உலகின் கோனவாய்;
ஏங்கி வருந்தும் உரோஜாவில்
இனிய வண்டு போலாவாய்;
தூங்கி வடியும் மனிதர்க்கோர்
தழங்கு மணியின் ஒலியாவாய்;
ஓங்கும் உன்தன் ஆதவனல்
உலகின் இருளை உண்பாயே!

(1967)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 பனித்துளியும் சூரியனும்

அழகார் உரோஜா இதழொன்றை
அணைத்து மகிழ்ந்த பனித்துளிதன்
எளிய வாயைத் திறத்தொளிரும்
இரவி நோக்கிக் கூறிற்று:
''தழலாய் எரியும் சூரியனே,
தன்னி கரில்லாத் தலைமகனே,
விழலாய்க் கழியும் என் வாழ்வு
விடிவை இழந்த கதையைக்கேள்!

''ஆடும் உரோஜா தன்னெழிலை
இழக்கா திருக்க உதவும்நான்
ஓடும் கணங்கள் சிலஇங்கே
ஒழியு முன்னே இறக்கின்றேன்;
தேடும் உயிர்க்குத் தீனிதரும்
தெவிட்டா உன்தன் பேரொளியில்
நாடிக் கலந்து மகிழ்ந்திடவும்
நல்ல வாய்ப்பும் எனக்கில்லை.

''உன்தன் கிரணக் குழவிகளின்
உடலைத் தொட்டே உளமகிழ
என்தன் சிறிய கரங்களிலே
எழுந்த துடிப்பைக் காணுயோ?
உன்தன் ஒளியில் மூழ்கியெழும்
உரமும் எனக்குச் சிறிதுமில்லை;
என்தன் இழிந்த நிலையைநான்
எவர்க்குச் சொல்லி ஆறிடுவேன்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்ற வானின் வீதியிலே
அசைந்து வந்து ஞாலத்துள்
புகுந்து சுங்குல் கடிகின்ற
பகலோன் பனியின் துளிநோக்கிப்
புகன்றான் வார்த்தை சில:''என்தன்
பரிவுக் குரிய சிறுகுழந்தாய்!
அகத்தை முதலில் உறுதியினால்
அணிசெய்; பின்னர் உரைப்பதுகேள்!

''பனியாய் வாழும் காலமெ'லாம்
பளிங்காய் ஆக மாட்டாய்நீ;
கணமே உன்தன் வாழ்வெனினும்
கல்லாய் இன்றேல் பளிங்காக
நனிதே மாறி வலியுறுவாய்,
நெகிழா இயல்பைப் பெற்றிடுவாய்;
பணிவே எனினும் பர்வதமாய்ப்
பணிதல் ஒன்றே சிறப்பாகும்.

''சின்னஞ் சிறிய துளியென்று
தள்ளி உன்னை ஒதுக்கிவிடேன்;
என்தன் கண்ணில் எல்லாமும்
ஒன்றே, உனக்கும் உனைச்சூழ்ந்த
பென்னம் பெரிய பொருளுக்கும்
பேதம் இன்றி ஒளிதருவேன்;
என்தன் ஒளியை நீஏற்றே
உடுவாய் மின்னித் திகழ்வாயே!''

(1979)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. எல்லாம் உமதே!

உழுது வாழ்வோன் உணவின்றி
உடலம் சோர்ந்து துடிக்கின்றான்;
அழுது வடிந்த கண்ணீரை
அருந்தி நெஞ்சம் கவல்கின்றான்;
கொழுத்த செல்வன் உழைப்பவனின்
குருதி குடித்து மகிழ்கின்றான்;
பழுத்த அவனின் பெருவயிறு
பானை யாகச் சிரிக்கிறது.

ஆடை நெய்வோன் துண்டேனும்
அணிந்து கொள்ள வழியின்றிக்
கோடை யோடும் குளிரோடும்
கோரச் சண்டை தொடுக்கின்றான்;
மூடை வயிற்றுப் பெருஞ்செல்வன்
மூக்கு முட்ட உண்டபின்னர்
கேடில் பட்டுத் துணியாலே
கையைத் துடைத்து மகிழ்கின்றான்.

சேற்று மண்ணில் காலூன்றிச்
செய்ய உண்டி பலசெய்த
ஆற்றல் மிகுந்த தொழிலாளி
ஆன்மா நொந்து தவிக்கின்றான்;
போற்ற அவனை யாருமில்லை,
புரிய எவனும் இங்கில்லை;
வேற்று மனிதன் அவனுயிரை
விழுங்கி ஏப்பம் விடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடை யுற்ற சொறிநாயாய்ச்
சோம்பி நின்ற துபோதுமடா;
பாடை ஏறிச் செ'லுமுன்னே
பாவே வயிற்றுச் சீமானை
ஆடை யின்றி அணியின்றி
அருந்தி மகிழ உணவின்றி
காடாக் கினியில் தள்ளிவிடக்
கரங்கள் கோர்த்தே எழுங்களடா!

நோக்க மில்லாச் சீமான்கள்
நொந்து படையா வாழ்வுக்கோர்
ஆக்கம் செய்த கரங்களினால்
அழிவு செய்ய எழுங்களடா;
தாக்க முற்ற இதயங்கள்
தீயாய் ஓங்கி அவர்வாழ்வைத்
தாக்கி மண்ணிற் சாம்பரெனத்
தள்ளி விட்டே மலரட்டும்!

கல்லை உடைத்து நெடுஞ்சாலை
கண்ட கைகள் சீமானின்
பல்லை உடைத்து வளர்கின்ற
பயிருக் கெருவாய்ப் போடட்டும்;
நெல்லைக் கொண்ட அவர்மனையை
நெருப்பி லிட்டுக் கொழுத்தட்டும்;
எல்லாம் உமதே; நீரேதாம்
இந்தப் புவியின் எஜமானர்!

(1973)



10050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. போராட்டம்

அழகார் உரோஜா மலர்நாடும்
அளியின் வாழ்வு போராட்டம்;
பழகு தமிழின் சொல்லோடு
பாட்டின் வாழ்வு போராட்டம்;
சுளகு போன்ற சுளையோடு
சுவையின் வாழ்வு போராட்டம்;
அழலாய் எரியும் வாழ்க்கையிலே
அனைத்தும் பெரிய போராட்டம்!

சிப்பி நோக்கி நகர்ந்துவரும்
சிறிய மண்ணின் துகள்பாராய்;
கொப்பைத் தழுவும் குருகுகளைக்
கூர்ந்து சற்றே கவனிப்பாய்;
தெப்பம் ஆழக் கடலோடு
தொடுத்த வாழ்வின் போர்பாராய்;
மப்பு கண்ட சூரியனும்
பொருதி நிற்றல் பாராயோ?

வான வெளியைப் பாராயோ,
வையக் கடலை நோக்காயோ,
மோனச் சுழலில் வெறிகொண்டு
மினுங்கும் மதியைக் காணுயோ,
கானக் குயில்தன் வாழ்க்கையிலே
கண்ட போரைப் பாராயோ,
ஏனே இன்னும் இருக்கின்ருய்?
எழுந்து சென்று போராடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரை நாடிப் பறந்துவரும்
வண்டின் வாழ்வைப் பாராயோ,
வலயம் வந்து தீயினிலே
வீழும் விட்டில் எண்ணுயோ,
அலர்ந்து குலுங்கும் உரோஜாவும்
அடைந்த பேறைக் காணுயோ,
உலர்ந்து செத்துப் போகுமு'னே
உற்ற போரிற் கலவாயோ!

வாழும் மனிதர் யாவருமே
வலிமை மிகுந்த படைவீரர்;
சூழும் புவியில் வாழ்வுமொரு
சுவைக்க வல்ல போராட்டம்;
பாழும் இந்த வையகமே
பொருதி நிற்கும் களமாகும்;
நீளும் பொழுது கழியுமு'னே
நிமிர்ந்து நின்று போராடு.

உற்ற துயரை வீசிஎறி;
உள்ளப் புயலை முடுக்கிவிடு;
கற்ற ஏட்டுக் கல்விதனைக்
கடலுக் கப்பால் ஒதுக்கிவிடு;
முற்ற முற்றப் பயமின்றி
முழங்கு வானில் நடைபோடு;
செற்றம் சூழ்ந்த வாழ்வினிலே
சீறிப் பாய்ந்து போராடு.

(1965)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. தோல்வி

சூழும் உலகில் தோல்வித்னைச்
சிந்தை எண்ணி வருந்துபவன்
வாழத் தகுதி இல்லாதான்;
வளர்ந்த மனிதன் அவனல்லன்;
நீளும் வெற்றிப் படிகளையும்
தெரிய முடியா மூடனவன்
நாளும் ஊர்ந்து போராடும்
நத்தைப் புழுவைப் பாராளே?

மலையில் ஏறும் மானிடரை
மறுகல் நீங்கப் பார்த்திடுவாய்;
வலையாய்ச் சூழும் தோல்வியதன்
வடிவார் பாடம் மொழிந்திடுவார்;
வழுக்கி விழுதல் ஒன்றேதான்
வரையின் முகட்டிற் கேஅவரை
இழுத்துச் செல்லும் பெரும்சக்தி,
இனிய வெற்றிப் படியென்பார்.

நெருடும் வெய்யில் ஒன்றேதான்
நிழல் அருளைத் தருகிறதால்;
இருளைக் கடனாய் வாங்கிவரும்
இரவும் ஒளியால் தொடர்கிறதால்;
உருளும் உலகில் தோல்வியெனும்
ஒன்றில் லாதே ஒழிந்திட்டால்
அரிது, வெற்றிப் பெருமகிழ்வை
அறிதல் அரிது; புரிவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயில் வீழும் சிறுவிட்டில்
தோல்வி யுற்று விழுவதி'லே;
தீயில் கொண்ட பேரன்பால்
தீண்டி அதனை முத்தமிடும்;
ஓயா வாழ்வில் தோல்வியினால்
உள்ளம் சோர்ந்து விடுமாயின்
தீயின் தழுவல் அதற்கில்லை;
தீண்டும் மகிழ்வும் அதற்கில்லை.

...PUBLIC LIBR...
PRADESHIYA ...
SAMMANTHURAI

நசையோ டுழைக்கும் சிலந்திதனை
நயந்து சற்றுப் பார்த்திடுவாய்;
அசையும் அதனின் வாயொன்றே
அழகார் பாடம் இயம்பிவிடும்;
இசையும் வாழ்வில் தோல்விதனை
எண்ணிச் சிறிதும் சோராமல்
பசைநீர் கொண்டு தன்குடிசை
புனையும் பாங்கைப் பாராயோ?

நண்ணி வளைக்கும் தோல்விதனை
நினைந்து கலங்கி நில்லாதே;
விண்ணில் தோன்றும் இடிமின்னல்
விடமே எனினும் தொடர்ந்துவரும்
தண்ணூர் மழையால் தாரணியின்
தரைகள் எல்லாம் பசுமைபெறும்;
நண்ணும் துயரம் தலையினிலே
தாங்கி வருவ துகளியேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழலும் வாழ்வில் மாறிவரும்
தோல்வி, வெற்றி எல்லாமும்
அழலாய் எரியும் சிறுவாழ்வின்
அடிப்ப டையான விறகுகளாம்;
முழுமை மிக்க மானிடனின்
மேனி மறைக்கும் ஆடைகளாம்;
விழுதல் இன்றேல் எழுவதுவும்
வையத் தில்லை புரிவாயே.

இடராய்த் தோன்றும் தோல்வியதன்
அடியி லன்றோ வெற்றியெனும்
வடிவார் இன்பத் தேனருவி
பட்டுத் துணியாய் நடக்கிறது;
விடிவும் இருளும் மானிடரை
வளைக்கும் பொருளே, புரிவாயேல்
தடைகள் இன்றித் தாரணியைத்
தாண்டிச் சென்று சுகம்பெறுவாய்!

(1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. தாய்மை

மானுடம் அடைந்து நிற்கும்
மாதவப் பேறி னுள்ளே
வானுறு பேறும் ஒன்று
வையகத் துண்டே யாயின்
தானெனும் நிலைக டந்த
தாய்மையே என்று சொல்வேன்;
பானுவாய் ஒளிரு மந்தப்
பேற்றினுக் கொப்பே இல்லை.

தாய்மையிற் சிறந்த் ஒன்று
தரணியில் இல்லை, இல்லை;
சேய்தனைத் தாங்கு மந்தச்
சேயிழை கொண்ட தாய்மை
வாய்மையின் வார்ப்பு; வண்ண
வளங்களின் சேர்வை; நல்ல
தூய்மையின் உருவும் வாழ்வுத்
தொடர்கதைக் கருவு மாகும்.

தாய்மைஇங் கில்லை யாயின்
தரணியில் ஏதும் இல்லை;
காய்கதிர் திங்க ளோடு
கோள்களும் வானும் இல்லை;
ஓய்விலா இயக்கம், நேரம்
உறுவெளி ஏதும் இல்லை;
ஆய்கையில் தாய்மை யின்றி
அவனியே இல்லை என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புறும் தாய்மை இங்கு
மாபெரும் சக்தி யாகும்;
ஆண்டவன் புவியிற் செய்த
அற்புதம் பலவற் றுள்ளே
வானுயர் புகழ்கு வித்த
வழுவிலா அதுவு மொன்று;
மானுடத் தோற்ற மெல்லாம்
மலர்வதே அங்கு தானே.

ஒளியிலா திருந்த மண்ணை
ஒளிபெறச் செய்து மாந்தர்
உளவிருள் போக்கி இங்கே
உத்தம சமுகம் தன்னை
அளித்திடும் வகையில் நல்ல
அறநெறி வகுப்ப தற்காய்
அளிமிகு அண்ண லாரை
அளித்தது தாய்மை யேதான்.

தாய்மைஇங் குரைக்கும் போதம்
தரணியில் சிறந்த வேதம்;
தேய்வுறு அவளின் பாதம்
தேசுடை சுவன இல்லம்;
சேய்மனம் மலர்ந்து தூங்கிச்
சுகம் பெறத் தினமும் இங்கே
வாய்சொ'லும் தாலாட் டுக்கள்
வாழ்க்கையின் ஜீவ கீதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயநல் த்ாய்மை இங்கு
தூங்கியே கிடக்கு மாயின்
மாயஇவ் வுலகு யாவும்
மருட்சியால் தூங்கிப் போகும்;
வேய்ங்குழல் போலாய் இங்கே
வேட்கைகொண் டிசைக்கு மாயின்
மாயுடல் எழும்பு தல்போல்
மேதினி விழித்துக் கொள்ளும்.

தகையுறு தாய்மை பாடும்
நிகரிலாத் தால்க ளாலே
இகமெலாம் மறைந்து வாழும்
அமரரும் தூங்கிப் போவார்;
திகழுமோர் திங்க ளும்தன்
திருமுகம் மறைத்து விண்ணின்
முகிலெனும் படுக்கை யின்மேல்
மேனியைச் சாய்த்துத் தூங்கும்;

தாய்மையின் குரல்எ ழுப்பும்
திவ்விய நாத மேதான்
வாய்மையின் கீதம்; இந்த
வையகச் சுருதி; எங்கள்
மாய்ந்திடா ஈசன் வாஞ்சை
மிகுதியால் இசைக்கும் பாடல்;
பாய்ந்தெழும் அதற்கு மண்ணில்
பகரமாய் எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையிலாத் தியாக மென்னும்
இனியசொற் பொருள்வி ளக்கம்
அணிபல சேர்ந்த தாய்மை
என்னுமோர் சக்தி யேதான்;
தணிவிலாத் தியாகத் தின்தீ
தாய்மையில் கனன்றெ ரிந்து
பணிவெனும் நெய்யின் மேலே
பழுப்பதைக் காண லாமே.

இருமையைப் படைத்தே ஆளும்
இறைவனை அடுத்த சக்தி
தரணியில் இருக்கு மாயின்
தாய்மையே என்று சொல்வேன்;
திருவொடு கருணை சேர்ந்த
தாய்மையின் குமுறல் கேட்டே
உருகிவான் கோள்கள் கூட
ஒடுங்கியே நடுங்கிப் போகும்.

(1978)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. புதிய இல்லம்

பாழுற் றிடிந்த சிலவீட்டில்
பதுங்கி வாழும் மானிடரே!
வாழ விரும்பின் எனைநோக்கி
விரைந்து வந்து கூடுங்கள்;
மீளாத் துயரின் முந்நீரில்
மூழ்கிக் கிடந்தீர்; இனியேனும்
வாழும் வழியை அறிந்தொன்றாய்
வாழ்ந்து சிறக்க வாருங்கள்!

சென்ற காலப் பொழுதினிலே
சண்டை யிட்டுச் சிரங்கொய்தீர்;
சின்னத் தனமாய்ச் சினங்கொண்டீர்;
சமூக அமைப்பைச் சீரழித்தீர்;
வென்றி சூடும் வெறியாலே
வேதம் கூறும் வழிகொன்றீர்;
நன்றி மறந்த மானிடராய்
நாளைக் கழித்தீர்; நலமிழந்தீர்.

சென்ற பொழுதிற் செய்தபிழை
செய்தல் மீண்டும் அழகல்ல;
ஒன்று பட்டு வாழ்வதிலே
உள்ள பலத்தை உளங்கொண்டு
அன்றெம் சான்றோர் உரைத்திட்ட
ஐக்'யம் என்னும் தளமீதில்
நன்றாய்ப் புதிய மனையொன்றை
நிறுவ வந்து கூடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இல்லம் அல்லாஹ்வின்
அருளின் மேலே அமையட்டும்;
நொந்து படைத்த அதன்கூரை
துறக்க முகட்டை எட்டட்டும்;
அந்த மில்லா ஒற்றுமையின்
அழகார் வீணை வீடெங்கும்
சத்தம் எழுப்பி ஒலிக்கட்டும்;
சந்’ரன் போலே ஒளிரட்டும்.

அந்த வீட்டில் வாழவென
ஆசை கொண்ட மானிடரைச்
சிந்தை குளிர வரவேற்போம்;
சேர்ந்து தங்க வழிசெய்வோம்;
எந்த உயிரும் எம்முயிராய்
எண்ணி வாழும் அவ்வீட்டில்
வந்து வாழ விழைவோரே,
விரைந்து வந்து சேருங்கள்.

பகைமை என்னும் திரையில்லை,
பாழும் விரோத இருளில்லை;
விகற்பம் எதுவும் அங்கில்லை,
வீணர் தொல்லை எதுமி’லை;
சுகத்தை நுகரும் பேராசை,
சுரண்டல், கொள்ளை யாதுமி’லை;
புகுந்து வாழ்ந்தே அவ்வீட்டில்
புதுமை காண வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டை வீட்டில் இதுவரையும்
ஒடுங்கி வாழ்ந்தீர்; போதும்;இனிக்
காட்டைத் திருத்திக் கழனிகளும்
காவும் சூழ்ந்த புதுவீட்டை
நாட்டில் அமைத்து நாமெல்லாம்
நலங்கள் பெருக வாழ்தற்குக்
கூட்ட மாக வாருங்கள்;
குலவி ஓங்கச் சேருங்கள்.

வருவீர், வருவீர், பகையென்னும்
வேண்டாத் திரையைக் கிழித்தெறிவோம்;
பிரிந்து சென்ற தோழர்கள்
பிணைந்து வாழ வழிசெய்வோம்;
புரிந்த பிழையை மீண்டொருகால்
புரியா வண்ணம் யாமெல்லாம்
ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாய்
ஒன்றிக் களிக்க வருவீரே!

தந்தை ஒன்று; தாயொன்று;
தருமம் ஒன்று; யாமெல்லாம்
விந்தை இறையின் சிருஷ்டிகளுள்
விளங்கி நிற்கும் ஓராத்மா;
சந்தி சிரிக்கும் நிலையினிலே
சிதறி வாழ்தல் முறையன்று;
பந்தம் பேணிப் பாசமுடன்
பிணைந்து வாழ விதிசெய்வோம்!

(1974)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. மகனே! கேள்!

அன்பார் என்தன் சிறுமகனே,
அழகார் நெஞ்சின் நீள்கனவே,
பொன்னாய் மணியாய்ப் புதுப்புனலாய்ப்
புதிரின் விடையாய்ப் பூந்துணராய்
மின்னும் சுடராய் வந்தெனக்கு
மகனாய்ப் பிறந்த் பெருநிதியே,
உன்மேற் கொண்ட பேரன்பால்
உரைக்கும் மொழிகள் செவிகொள்வாய்.

பிஞ்சு நெஞ்சம் உனக்குண்டு,
பீடை கண்டு கலங்காதே;
அஞ்சேல், அஞ்சேல் யாரையுமே,
அஞ்சுன் இறையை, அவனன்றோ
நெஞ்சில் வாழும் பெருங்கருணை;
நேர்மை போற்றி! ஞாலத்தில்
துஞ்சல் துறப்பாய்; துயர்கடிவாய்;
துணிந்து வாழ்ந்து சிறப்பாயே!

நல்லார் நாடிச் சென்றிடுவாய்,
நயந்து களிப்பாய் அவரன்பை,
பொல்லா ருண்டு, போலியவர்;
போற்ரு தவரை வெறுத்திடுவாய்;
கல்லார் கேண்மை கணமேனும்
கருத்தால் விரும்பி நில்லாதே;
வல்லோன் விரும்பும் அடியானாய்
வாழ்ந்து சிறக்கத் துணிந்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயமை கொண்ட கொடுநெஞ்சர்,
கருத்தில் தூய்மை இல்லாதார்
நயமாய்ப் பேசி வழிகேட்டின்
நெருப்பில் வீழ்த்த முனைவார்கள்;
இயன்ற வரையில் அவர்வழியை
ஒதுக்கி வாழத் துணிந்திடுவாய்;
முயன்று தினமும் நேர்வழியின்
புனலில் குளிக்கப் பழகிடுவாய்.

AIR ALI PUBLIC LIBR
PRADESHIYA SABH
SAMMANTHURAI

ஊன முற்ற படுவேடன்
இனிய குருகைச் சிறைகொள்ள
மோன நிலையில் கண்ணிதனை
மூடி வைத்தே ஒளிந்தவனாய்க்
கானப் பறவை போலேதன்
குரலை உயர்த்திக் கூவுகிறான்;
தீனை விரும்பி நீஅவனின்
தீய வலையில் வீழாதே!

பரந்து விரிந்த நெடுவானில்
பறந்து திரியும் இராஜாளிப்
பறவை போலாய்ச் சுதந்திரமாய்ப்
பறந்து திரிவாய்; படுவேடன்
விரித்து வைத்த சிறுவலையில்
வீழ்ந்துன் சுயத்தை இழக்காமல்
சிறந்து வாழும் வழிதெரிவாய்;
சீர்மை பெற்றே ஓங்கிடுவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்ற மென்னும் செந்தீயைச்
சிறிதும் தீண்ட நினையாதே;
கூற்றம் போன்ற அஃதுன் தன்
கவினுர் உளத்தைக் கொன்றுவிடும்;
நேற்று வரையில் நீசேர்த்த
நன்மை களையும் தின்றுவிடும்;
ஏற்றம் உறநீ எண்ணுவையேல்
இழிந்த சீற்றம் கொல்வாயே!

தெரிந்த முகங்கள் யாவையுமே
துருவித் துருவிப் பார்த்திடுவாய்;
புரிந்து கொள்ளும் நோக்கோடு
பார்த்து நாளும் வருவாயேல்
விரிந்த கிரணம் பலகோடி
வீசும் செம்பொற் சூரியனாய்
இருந்து திகழும் முகமொன்றை
இனிது கண்டு தெளிவாயே.

அடிமை போலாய் எந்நாளும்
அமைந்து வாழ்வாய்; அல்லாஹ்வின்
அடியான் என்ப தனை நீயும்
அகத்தில் நினைந்து பணிந்திடுவாய்;
படிந்து பணியும் பக்தரிடை
மரண முற்றேன் போலாவாய்;
முடிவில் முதலோன் பேரருளைப்
பணிவின் மூலம் பெறுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமை என்னும் குணந்தன்னைப்
பொருதிக் கொன்று புதைத்திடுவாய்;
இறையின் அன்புக் குரியோரின்
இனிய பாதத் துகளாவாய்;
பொறுமைப் பொருளாம் ஆதத்தைப்
பணிந்த வானோர் குணமுறுவாய்;
பொறுமை கொண்ட சாத்தானாய்ப்
புந்தி இழந்து வீழாதே!

வஞ்ச முற்ற படுநெஞ்சர்
வலையிற் சென்று வீழாதே;
கொஞ்ச மேனும் தயவின்றிக்
கொளுத்தும் வெய்யில் கண்டஞ்சித்
தஞ்சம் கோரி நீழலினைத்
தேடி ஓடிச் செல்வதுபோல்
வஞ்ச நெஞ்சர் வழிவிட்டு
விழுமி யோரை நாடிடுவாய்.

நலங்கள் சேர்க்கும் நல்லறிவை
நாடிச் சென்று தேடிடுவாய்;
விலையில் லாத கல்விதனை
விரும்பித் தேடிப் பெறுபவனே
நிலையாய் நிற்கும் பெருநிதியை
நிலத்திற் கொண்டோன்; திருவுடையோன்;
தொலையா நிதியாம் கல்விதனைத்
தினமும் தேடி உயர்வுறுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அடைந்த மனிதர்க்குத்
தாளம் வழங்கும் சமுத்திரமாய்த்
தன்னோ டுறவு பூண்டவரின்
துயரம் களையும் சினேகிதனாய்
நின்று விளங்கும் நல்லறிவே
நிலையா உலகின் பெருநிதியம்;
கொன்றுன் பொழுதைக் கல்வியெனும்
கலன்கள் தேடிக் குவித்திடுவாய்.

அறிவே உன்தன் ஆருயிரின்
அசைக்க முடியா ஆதாரம்;
குறியோ டுறையும் ஆத்மாவின்
கொங்கு கமழும் ஆகாரம்;
நெறிகள் நூறில் நன்னெறியை
நயந்து காட்டும் கைகாட்டி;
நறிய மலரின் வண்டேபோல்
நலஞ்சேர் அறிவின் சிறையாவாய்.

பெற்ற தாயின் கூற்றுகளைப்
பிரிய மோடு செவிகொள்வாய்;
பற்றோ டுரைக்கும் அவள்வார்த்தை
பாரிற் சிறந்த மறையாகும்;
வற்றா அன்பால் அவள்கூறும்
வாழ்த்தே உன்தன் விதியாகும்;
முற்ற முற்றப் பணிந்தவனாய்
மாதா பாதம் சிரம்கொள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல் போலாய்த் தொடர்ந்துவரும்
தோல்வி கண்டு துவளாதே;
வேழம் எனினும் அடிசறுகி
வழுக்கி விழுதல் இயல்பாகும்;
சூழும் துயர்கள் ஒருநாளும்
தொடர்ந்து கொண்டே செல்வதிலை
வாழப் பிறந்த மகனே! நீ
வாழு ளெல்லாம் முயன்றிடுவாய்.

வாய்மை ஒன்றே உனைக்காக்கும்
வலிமை மிகுந்த கேடயமாம்;
பாய்ந்து தாக்கும் ஒருநூறு
புலிகள் உன்னைச் சூழ்ந்திடினும்
வாய்மை தன்னை ஒருகணமும்
வாழ்வில் இழக்க நினையாதே;
வாய்மை தன்னை இழப்பதினும்
மாய்தல் நன்று, புரிந்திடுவாய்.

வறுமை மிகுந்து வாழ்க்கையொரு
வனமாய் மாறிப் போயிடினும்
சிறுமை மிகுந்த மானிடனைச்
செல்வர் முன்னே செல்லேல்நீ;
பொறுமை என்னும் கூர்வாளால்
பொல்லா வறுமைத் திரைகீறு;
அருமைச் சுயத்தின் ஒளியினிலே
அவலம் போக்க வழிதேடு.

(1964)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கத் துணை

| | | |
|---|---|---|
| அண்ணலார் | — | நபி முஹம்மது (ஸல்) |
| அபூஜஹில் | — | நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பெரிய தந்தையர்களுள் ஒருவன்; இஸ்லாத்தின் பரமவைரியாக இருந்து, 'பத்ரு' எனும் போரில் கொல்லப்பட்டவன். |
| அல்லாஹ் | — | இறைவன் |
| அலீ | — | பார்க்க: அஸதுல்லாஹ் |
| அஸதுல்லாஹ் | — | இறைவனின் சிங்கம் என்பது பொருள். நபி முஹம்மது (ஸல்) அவர்களின் மருகரும் இஸ்லாமியக் குடியரசின் நான்காவது ஆட்சியாளருமான அலீ (ரலி) அவர்களின் பட்டப்பெயர். |
| ஆதம் | — | மனித இனத்தின் ஆதி பிதா; ஆதி மனிதர். |
| ஆமினா | — | முஹம்மது (ஸல்) அவர்களின் அன்னை |
| ஆயிசா | — | முஹம்மது (ஸல்) அவர்களின் மனைவியர்களுள் ஒருவர். |
| ஆலம்கீர் | — | இந்தியாவை ஆட்சி செய்த முகலாயப் பேரரசர்களுள் ஒருவர். |
| இபுராஹிம் | — | இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களுள் ஒருவர்; ஏப்ரஹாம். |
| ஈமான் | — | இறைநம்பிக்கை |
| உமர் | — | முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்களுள் ஒருவர். மதீனாவிலே தோற்றுவிக்கப் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இஸ்லாமியக் குடியரசின் இரண்டாவது ஆட்சியாளர்.

கல்பு — மனம், இதயம்.

குதி — அகமியம் (ego)

குர்ஆன் — முஸ்லிம்களின் வேதநூல்; அனைத்துலகமக்களுக்காக அருளப்பட்டது.

சவ்வால் — இஸ்லாமிய மாதங்களுள் ஒன்று.

சிதுரா — 'சிதுரத்தில் முன்தஹா' என்பதன் சுருக்கம் மேலுலகிலுள்ள ஓர் எல்லை.

சிர்ரு — இரகசியம்

தக்தீர் — தலைவிதி

தக்பீர் — அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப்பெரியவன்) எனும் கோஷம்

தர்வேஷ் — துறவி, பற்றற்றவன்

தன்ஸீல் — திரு குர்ஆனின் பெயர்களுள் ஒன்று.

தாஹா — முஹம்மது (ஸல்) அவர்களின் பெயர்களுள் ஒன்று.

திக்ரு — இறைவனை நினைவுசெய்தல்

பக்கீர் — ஏழை

பாத்திமா — முஹம்மது (ஸல்) அவர்களின் புதல்விகளுள் ஒருவர்.

மஸ்ஜித் — முஸ்லிம்களின் இறைவழிபாட்டுத் தலம்; பள்ளிவாசல்.

முல்லா — இஸ்லாமிய மார்க்க அறிஞர்.

முஸல்மான் — இஸ்லாத்தைப் பின்பற்றுபவன்; முஸ்லிம்

மூஸா — இறை தூதர்களுள் ஒருவர்; மோஸஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹம்மது — இஸ்லாத்தின் போதகர்; இறைவனால் உலகுக்கு அனுப்பப்பட்ட இறுதித் தீர்க்க தரிசி.

ராபியா — இறைவனை நேசித்து அவன் காதலிலேயே தம் வாணாளைக் கழித்தவர் இவ்வம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் பிற நூல்கள்

- ❋ பரீட்சைகளிற் சித்தி பெறுவதெப்படி?
- ❋ அறிவுத் துறையில் முஸ்லிம்கள்
- ❋ மதுக் கலசம் (கவிதை)
- ❋ பாலியற் பிரச்சினைகள்
- ❋ கவிதாஞ்சலி (கவிதை)
- ❋ இஸ்லாமிய வரலாறு I
- ❋ இஸ்லாமிய வரலாறு II
- ❋ நான் (கவிதை)
- ❋ அறிவியல் வளர்த்த முஸ்லிம்கள் I
- ❋ இஸ்லாமிய வரலாறு III (அச்சில்)
- ❋ நம்பிக்கை மணிகள் (கவிதை - அச்சில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org